ஸ்ரீரஸ்து

ஸ்ரீ நீளா பூமிதேவிகள் ஸமேதரான
சென்னை ப்ரஸன்ன வேங்கடேச
ஸ்வாமி ஸன்னதி வீதியின்

ப்ரபாவம்.

சென்னை ப்ரோக்ரஸீவ் யூனியன்
பாடசாலையில் உபாத்தியாயராய் இருக்கும்
அத்திப்பாக்கம் ஆசூரி மணவாளய்யங்கார்
என்னும்
தாதாச்சாரியரின் குமாரன்
ஆசூரி - ஸ்ரீனிவாஸனால்.

சென்னை மனோரஞ்சினி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.
சுக்கிலஞு

(...ll Rights Reserved.)
...வாங்குகிறவர்களின் சக்தியே.
...r mite of the purchasers.

1930

Q22 : 417
N30.
149786
12 MAY 1930

ஸ்ரீரஸ்து.

விஞ்ஞாபனம்.

1929 ம் ௵ அக்டோபர்ீ 14ௗ ராத்திரி சுமார் 3 மணிக்கு என் விண்ணுலக தந்தையாராகிய ஏழுமலை எம்பிரான் சங்கு சக்ர குண்டலதாரியாய், துளசிமணி தாமரை மணி ஸாளிக்ராம மாலைகள் ஸமர்ப்பித்துச் கொண்டவராய் உளர்த்துவ புண்ட்ரங்கள் உடையவராய் திருக்கைகளில் ப்ர்ம்ம தாளங்களுடன் இருபக்கங்களிலும் இரண்டு ஸ்ரீவைஷ்ணவ பக்தர்கள் கபில நிறமுள்ள சாமரங்கள்சேர்க்க திருவாலவட்டங்களை வேறு இரண்டு பக்தர்கள் சேர்க்க, பட்டுபீதாம்பர பஞ்சகச்சங்களுடன் ஸேவை ஸாதித்து அடியேனை எழுப்பி அடியேனுக்குத் தொண்டர் அடிப்பொடித்தூள் தாஸன் என்று பெயரிட்டு, சக்கரத்தாழ்வாரை பல்லக்கில் எள்ள பண்ணிக்கொண்டு தம்மோடு வரச்சொன்னார் இன்னொரு பக்தரும் அடியேனுமாக சக்கரத்தாழ்வாரை எள்ளப் பண்ணிக்கொண்டு நாங்கள் முன்னே போக பெருமாள் எங்களுக்குப் பின்னால் எங்களைத் துறத்திக்கொண்டே வந்தார் நாங்கள் போகும் வழியோ மேடும்பள்ளமுமாகவும் முள்ளுங் கல்லும் நிறைந்து புதறுதளுடனும் இருந்தது. நாங்கள் எவ்வளவு ஓடினாலும் அவருக்குத் திருப்தியில்லாமல் "நாள் ஆய்விட்டது சீக்கிரம் போகவேண்டும், நம் வரவை அங்கு அந்தரங்க பக்தர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் சீக்கிரம் போகவேண்டும் என்னுடன் நீங்கள் ஓடிவாருங்கள் என்று தாமே, எங்களுக்கு முன்னால் அதிகவேகமாய் ஓடினார். நாங்கள் எங்களால் ஆனமட்டும் எவ்வளவோ வேகமாய் ஓடினோம். கடைசியாக எடாறு வழியைப் பூராய்த் தாண்டி மௌன்ட்ரோட்டைப்போன்ற பெரிய அகலமாக ஒரு ரோட்டுக்கு வந்தோம் அவ்விடத்தில் கோடானுகோடி ஜனங்கள் வரிசை வரிசையாகவும் மிக்க ஒழுங்காகவும் பயபக்தியுடனுர இருக்கக் கண்டோம் மிக்க ப்ரகாசமான அழகிய விளக்குகள் தோரணங்களைப்போல் எரிந்துக்கொண்டிருந்தப்படியால் நாங்கள் தூரத்தில் வரும்போதே அவர்களைக்கண்டோம் அவர்களும் எங்களைக்கண்டார்கள் புருஷர்கள் ஒருபக்கமும் ஸ்திரீகள் வேறொரு பக்கமுமாக இருந்தார்கள் எல்லாரும் ஒரே காலத்தில் ஒருவித ஸந்தடியும் இல்லாமல் தங்கள் கைகளைச்சிரவின்மேல் கூப்பித்தண்டன் ஸமர்ப்பித்து நின்றார்கள். அவர்களுக்கு முன்னால் என் தந்தை ஏழுமலை எம்பிரான் தமக்காக ஸமர்ப்பித்திருந்த ஸிம்மாஸனத்தின் பக்கத்தில் சக்ரத்தாழ்வாரைதிருப்பல்லக்குடன் எள்ளப்பண்ணிவிட்டுநாங்களும் பக்தகோடிகளோடு கலந்து நின்றோம் எல்லாரும் விமரிசையாய் உட்கார்ந்தார்

கள் என் தந்தை உடனே எழுந்து எதோத்யானம் செய்யவே எல்லாரும் எழுந்து நின்றோம் அவர் உடனே தம்முடைய ஸிம்மாஸத்தில் பரமபத நாதராய் ஸ்ரீநீளா பூமிதேவிகளுடன் ஸேவை ஸாதித்து தங்கள் விஷயமாக ஸத்கால க்ஷேபம் பண்ண ஆரம்பித்தார் அப்போது அவர் ஸாதித்த விஷயங்கள் எல்லாம் மிக்க அருமையாக இருந்தன என்னைத்தவிர மீதிபேர் எல்லாரும் அவரவர்களுடைய நோட் புஸ்தகங்களில் குறித்துக்கொண்டார்கள் அடியேன் உடனே எழுந்தேன் எங்கள் ஸ்வயாசார்யராகிய கோடி கன்னிகாதானம் எடூரிம்பிடி வெங்கடாத்ரி ஹரகோபாலதாததே சிகர் என்றும் ஸ்வாமியின் ஸ்ரீ வடிகளை முன்னிட்டு அவருடைய சர்ம ச்லோகங்களுக்கு மேற்படி வம்சத்தாரில் ஸ்ரீரங்கம் ஸம்ஸ்க்ருதபாடசாலைவித்வானாகிய ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியர் என்றும ஸ்வாமிப்ரஸாதித்தருளிய ஷியார் சர்மச் லோகங்களின் அர்த்தங்களை எழுதியிருக்கும்படியான நோட் புஸ்தகத்தில் எழுதலாயினேன் அன்றுமுதல் இதுவரைக்கும் சுமார் 2000 பாடல்களுக்குமேல் ஸாதித்திருக்கிறார் அவற்றின் அர்த்தங்களையும் விசிதமாய்தெரிவித்திருக்கிறார். அவற்றுள்சிலவற்றை மாத்திரம் இந்த புஸ்தகத்தில் அச்சிட்டேன் மீதி பின்னால் வரும் இதுவரைக்கும் அவர்ப்ரஸாதித்த விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாய்க்கீழ்காணும் அட்டவணைத் தெரிவிக்கும் கனதனவான்கள் எல்லாரும் க்ருபை பண்ணி இந்த அட்டவணையைப்பார்த்து அதில் கண்ட விஷயங்களுள் எதைப்பற்றி ஹரிகதா காலக்ஷேபம் பண்ணச் சொன்னாலும் புஸ்தகத்தை அச்சிடச் சொன்னாலும் எந்தையார் யாதொரு தடையுமின்றி அடியேன் மூலமாய்ச் செய்வாராம் எபபடியாவதும் அவர் தம் ஸொந்த புத்திரராகிய வேதாந்த தேசிகர் இங்கும் ஏள்ளி வேத பாடசாலை வைத்து நித்யபடி வேதம் ஓதுவித்து திருப்பதி ஏழுமலை பாடல் பெற்றாற்போல் இச்சென்னையிலும் ஏழுமைல் பாடல்பெற்ற ஸ்தலமாக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி இருக்கிறார். அவருடைய உத்திரவின் மீது அடியேன் இதைத் தெரிவித்தேன்,

இப்படிக்கு,

தொண்டர் அடிப்பொடித்தூள் தாஸன்.

49, இருளப்பன் தேருவு, சென்னை.

அறிக்கை.

1. அரிய அக்ஷர அடுக்கு அரும் அரும்பு அதுபோல்
தெரியத் தெளிவாகத் தேர்ந்து தேவர் தந்த துதியாம்
பெரியப் பெரும் பாடல் பெருமைப் பூராய்ப் பாரும்
அதிலோ அக்ஷர அமைப்பு அடியேன் அமர்த்தி
[அளித்தேன்

2. அடியேன் அறியாதவன் அருமை அரும் அக்ஷரம்
படியேன் படித்தாற்போல் பாசுரம் பதிந்ததால்
கடிபேன் கண்டதும் போதும் கண்டுக்கொள்ளும்
[குற்றத்தை
அடியேன்மேல் அன்புகாட்டி அவைகளை க்ஷமித்தருள்வீர்

3. கண்ணன் கழல்களே கலியுகத்தில் கதி எனவே கொண்டு
[காட்ட
மந்தன் மழல்களே மதியுடைத்தாய் மாதவர்
என்னை மகிழ்ந்து வுகந்தார்
நந்தன் நிலைகளே நிஜமேனவே நாட்டிலுள்ளார்
கண்ணன் கழல்களே கதியெனக்கொண்டு நன்கறிவீர்
காணும் பிழைகளைக் கண்டுக் கழிப்பீர்

4. பிழைகளோ பல பார்ப்பிர் இப்பதிப்பில்
பார்த்தன் புத்ரன் யான் படியேன் ஆதலால்
நிலைகளோ நடுநிலை என்று நினைத்தே
நிகழும் பிழைகளை நீக்கிக் கொள்ளும்
இவைகளோ இனி இல்லாதாகும் இங்கு
இது முதல் இனிமேல் இதற பதிப்பினில்
பிழைகளோ பின்னும் படியேன் என தெனபேன்
பார்த்தால் புறியும் என் பரிக்ஷையைப்பாரில்

5. பாரில் படித்தேன் பத்து வகுப்பே
பார்த்தால் பரிக்ஷை அதனைப்புரியும்

ஊரில் உள்ளார் உண்மை உணர்வார்
உத்தமன் என்சொல் உண்மை எனவே
பேரில் பார்த்தாலே புரியவில்லையோ
பெருமை ஏதேனும் உண்டோ பாரும்
பாரில் பார்த்தனைப் போற்றும் பக்தியே
பாலன் எந்தனைப் பதியச் செய்தது

6, பக்தியைப் பார்த்து பார்த்தர் தந்ததை
பாரில் உள்ளார்கள் பார்க்க வேண்டியே
முத்தி மார்க்கமே என்று மகிழ்ந்தே
முதன்மையாய் நின்று மொழியல் ஆயினேன்
சக்தி இதுவே தான் சொல்லைச் சேரும்
சார்ந்த சொற்பிழை என்னதென்பேன்
பக்தி புகழவே முக்தி மகிழவே
பக்தன் என்பிழை பொருத்தருள்வீர்

7. கழலே கதியெனக் கொண்டு நான் காட்டவே
மழலே என எண்ணி மாதவர் மகிழ்ந்ததால்
பலவே ஆயினும் பார்த்திடும் பதப்பிழை
கழலே சதியெனக் கண்டதைக் கழித்திடும்

8, கொள்ளும் என்றைக்கும் கோவிந்தர் கொள்கைகள்
உள்ளும் புறமும் உள்ளதாய் உண்மையாய்
தள்ளும் தப்புகள் தமிழ் தெரியேன் ஆகையால்
கொள்ளும் எப்போதும் கொண்டல் வண்ணன் கொள்கை

9. தப்புக்கள் எல்லாம் தனயன் என்னுடையதே [யே
மெய்ப்புகள் எல்லாம் மாதவர் எந்தை சொல்லே
ஒப்புக்கொள்வீர் இதை ஒருமிக்க எல்லாரும்
தப்புக்கள் தள்ளியே தாஸன்மேல் தயைக்காட்டும்

10 தாஸன்மேல் தயைகாட்டி தந்தைச்சொற்களால் தேரும்
தாஸன் ஸ்ரீனிவாஸன் தந்த தந்தை வெங்கடேசர் சொல்
[பாரும்
நேசன் என்றெண்ணியே நேரும் பிழைக்ஷயத் தீரும்
தாஸன் தவறேன் இனிமேல் தந்தைச்சொல் தரல் ஆவேன்

11. புழலே பாய்ந்திடும் பாணியைப் பருகியும்
குழலே கொண்டூதும் கோபாலன் கொள்கைபோல்
மழலே எனமகிழ்ந்து மைந்தனை மகிழ்வியும்
புழலே பாய் நீர்போல் புத்தியில்லான் என் பிழையை

12. பிழைகளைப் பாராதீர் பலகோடி இருந்தாலும்
இலைகளை எண்ணுதீர் இருக்கும் தைமடல் இலையில்
விலை இதற்கில்லையெ வித்தை என் தந்தை சொல்
பிழைகளைப் பாராது பார்த்தர் புகழைப் பாரும்

13. பாரும் பார்த்தர் புகழைப் பார்க்கவேவேண்டுமென்று
தீரும் தீரா வினைகள் திருவாக்கு என் தந்தை சொல்லால்
பேரும் பெரிதே ஆகும் பெருமையும் பெறுவீர்கள்
பாரும் பாரில் பதங்கள் பார்த்தர் பாதங்கள் போற்ற

14. அச்சுப் பிழைகள் அவற்றை
அடியேனுய் அழிக்க அமர்ந்தால்
அச்சுதர் அதற்கென்றும் அவகாஸம் அளிக்கவில்லை
கச்சிதம் இதுகாணுதென்று கண்டே பலரைக் கேட்டும்
அச்சுதர் அவர் சொல்போல்
அவகாஸம் அவர்க்கில்லை என்னுர்

15. அச்சுப்பிழைகள் அவைகள் அறிவீர் அநேக ஆயிரங்கள்
கச்சிதம் இல்லை என்றும் கண்டென்னைக் கேழ்க்காதீர்
அச்சுதர் அவர்போல் அவற்றை அன்பால் பெற்று
கச்சிதம் எனக்கண்டு கண்ணன் கழல்களைக் கொள்ளும்.

இப்படிக்கு அடியேன்,
தொண்டர் அடிப்பொடித்தூள் தாஸன்,
எந்தை ஏழுமலையார் சொல்படி கலியுக ஆழ்வான்,
49, இருளப்பன் தெருவு, சென்னை.

முன்னுரை

1. அகர ஆகாரங்கள் அப்பன் ஆனந்த அருள்கள்
இகர ஈகாரங்கள் இந்த ஈசனின் இடம்
அகர ஆகாரம்போலும் அடுத்த அக்ஷரங்கள் ஆம்
இதர இடம் இல்லாதால் இவரை இசைந்து இனிக்கும்

2. ஆகாரமும் ஆக்கும் ஆண்டவர் ஆஞ்ஞைபால்
ப்ராகமும் பார்க்கும் பார்த்தன் பெருமைகள்பூராய்
ஆகாரமே அன்றோ ஆனந்த நிலயம் ஆச்சு
ப்ராகாரம் ப்ரணவம்போல பார்த்துப்பதியலாச்சு

3. ஆண்டவர் அஞ்ஞைகளே ஆகாரம் ஆக்கிவிடும்
மாண்டவர் மாக்ஷிமைகளே மாநிலந்தில் மாட்டும்
தாண்டவம் தானுடித் தாரணி துயரும்தாழ்த்தும்
மாண்டவர் மாளாதது போல மானிடர்கள் பேரை
[மாற்றும்

4. ஆத்மா ஆனந்தமாகும் ஆத்மஞானம் ஆனல்
மாத் மியம் மகிழ்தல் ஆகும் மாநில மாந்தர்கட்கு
ஆத்மா ஞானம் அதுவே ஆக்கும் அப்பன் அருள்கள்
மாத ப்ரதிமாதமும் மாநிலத்து மாந்தரைமாற்றி [அளவ

5. ஆண்டவர் ஆஞ்ஞைகள் ஆத்மாவே ஆக்கும் அன்றோ
பாண்டவரைப்போலும் பார்த்தரால் போற்றப்படவே
தாண்டவமாடித் துதிக்கும் தாஸானுதாஸராய்
ஆண்டவர் ஆஞ்ஞையால் ஆனந்தம் ஆக்கும் அன்றோ

6. ஆளுகைகளுக்கெல்லாம் அப்பன் ஆளுகை மேல் என
காலுகை உள்ளாரே கண்டும் கேட்டிருப்பீரே
பாதுகை தன்னல் பாரும் பார்த்தன் புகழ்பூரும்
ஆளுகையாய் அமர்ந்து ஆஞ்ஞை அமர்த்தினதை

7. ஆன முதலில் ஆக்கும் ஆகும் சிலவை அடக்கி
மான அவமான மாகும் மாளும் மைந்தரே கேளும்
ஆன அதற்கு அதிகம் யார்க்கும் சிலவு ஆனல்
மானக் குறைவு மாக்கும் மாற்றும் மகிழ்வில் தர்க்கும்

8. ஆனந்த அருள்நிலய அப்பன் அமர்ந்த வீதி
தானந்த தருமங்களைத் தாஸர்கள் செய்யும் வீதி
பாணங்களைக்கண்டுப் பார்த்தர் புகழும் வீதி
ஆனந்தமாகவே ஆண்டவர் ஆளும் வீதி

9. ஆகும் கோபுரவாசல் ஆளும் ஆஞ்ஞையைக்காட்ட
காலும் கைகளும் வீசி காணும் படி நடப்பார்க்கு
பாலும் பழமும் போலும் பார்த்தன் புகழைப்பார்க்க
ஆகும் அமர்ந்திங்கும் ஆண்டவர் அருள்களே.

10. நிந்தை நீதியால் நீக்கி நிகழும் நல்லதே நாட்டும்
விந்தை வீதியால் ஆக்கி விஷமம் இல்லாது வாட்டும்
சிந்தைச் சேதியால் சென்றுச் சிதறும் படியாய்ச் செய்யும்
நிந்தை எந்தையால் நீங்கி நிஜமாமே நிலையில் நிரூபம்

11. தன்னைத் துதிப்பார் தம்மைத் தன்னிடந்தான் தருவித்துக்
கன்னைக் கண்டால் கறவைக் கன்னிடம் கண் கண்டளித்து
கன்னைத் துடைத்துத்தானே கன்றின் தூசியைத் துலைக்கு
[மாப்போல்
கன்னைக் கண்ட கறவைக் கொப்பாம் கடவுள் கண்காக்ஷி
[எனலாம்

12. கடவுள் கருணைகளைக் கண்டுக்கொண்டு களிப்பீர்கள்
அறிவுள்ளவர்கள் ஆகும் அன்பர்கள் அனைவர் நீங்கள்
பரியுள்ள பண்டம் போலும்பார்த்தன் பக்தியதாலே
கடவுள் காருண்யங்களை கண்கள் குளிரக் காட்டும்

13. காட்டும் களிப்புடனே கண் காணு காசி இங்கு
நாட்டும் நாரணர் நிலை நல்ல நண்பரை நிறுத்தி
பாட்டும் புகழப் பார்ப்பீர் பார்த்தர் பேரை எங்கும்
ஆட்டும் பொம்மைகள் கூட ஆனந்த நிலயம் காட்டும்

14. வாங்கும் வைகுந்தப் புகழ் வாஸுதேவர் வசனம்
தாங்கும் தாரணி தன்னைத் தகுந்த தாஸர்கள் ஆக்கி
நீங்கும் நில்லாதி கழ்கள் நிலையான ந்யாயம் நாட
வாங்கும் வைபோகங்கள் வாழ்த்தாம் வையகத்தார்க்கு

15. வையகம் வாழும் இனிமேல் வேங்கடேசரை வேண்ட
செய்யகம் சேர்க்கும் பாபம் சேராது செறிந்தோடும்

மெய்யக முள்ளாராய் மாநில மாந்தர்கள்
வையகம் இதில் வாழ்வர் வேண்டும் வாஞ்சனையாலே

16. வாஞ்சனையால் வாழ்த்து வாஸுதேவர் வசனம்
ஆஞ்சனேயரை அன்று அரும் அன்பர் ஆக்கினர் சொல்
தான் சேனைத்தாங்கிய தாயார் தம் தற் புகழ் போல்
ஆந்தனையும் அன்பரை அன்பு அருளால் ஆதரிக்கும்

17. ஆகும் ஆதரவென்றும் அன்னைமார் அவர்கள் அம்ருதம்
சாகும் சண்டாளரின் செயல்கள் சென்னை இனி செழித்
[தோங்க
வேகும் வஞ்சகம் எனலாம் வைகுந்தர் வேங்கடத்தால்
ஆகும் அனைவருக்கும் அன்னைமார் அவர்கள் அம்ருதம்

இப்படிக்கு

சென்னை ஸ்ரீ நீளா பூமி தேவிகள் ஸமேதரான ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேசரின் ப்ரியமுள்ள பக்தனும் தொண்டரடிப்பொடித்தூள் என்னும் ராமானுஜ தாஸரில் ஸ்ரீவைஷ்ணவ தாஸன் திருவள்ளூர் தாலூக்கா அத்திப்பாக்கம் க்ருமம் ஆசூரி மணவாளய்யங்கார் என்னும் தாத்தாச்சாரியரின் குமாரன் ஆசூரி ஸ்ரீநிவாஸன் 49, இரளப்பன் தெருவு சௌகார்பேட்டை சென்னை.

முகவுரை

1. விலை விவரம் விசித மில்லா விப்ரன் வாய்வழி வார்த்தை
சிலை சிகரம் சிறப்புள்ள செல்வர் சேய்மொழிஎன்சொல்லே
நிலை நிகரம் நிரூபித்து நீர்மையாய் நின்று நாட்டும்
விலைவிவரித்தல் வேண்டா வேங்கடேசன் என் வாழ்த்தே

2. விலை வைத்து விற்காத வீர்ய வைரத்தை வாங்கும்
இலை தைத்து இருக்காத ஈர்க்கைப் போல் இடர் நீங்கும்
சிலை வைத்துச்சீராடும் சென்னைச்சீர் வெங்கடேசன் என்
விலைவைத்து விற்கா வாழ்த்து வேண்டும் வேலைகள் செய்யும்

3. விலை விசிதம் உண்டோ வேண்டும்விப்ரன் வாய் வேதம்
ஓத சிலைச்சீரிற் சிறந்துள்ள சென்னை வெங்கடேசன் என்
[சொல்
நிலை நிறுத்தவே நிறுத்தி நிஜரூபம் நின்று தந்தேன்
விலை மதிப்பு வேண்டாதீர்வேங்கடேசன் நான் சொல்
[வார்த்தைக்கு

4. வேதத்தை விற்பாருண்டோ வேண்டி விரைந்து வினவும்
கீதம் கண்டதும் உண்டோகொண்டக் கொள் முதல் என்னு
தீதும் இதற்கும் உண்டோ தெய்வம் என்வாக்கே யாதலால்
வேதம் இதுவே எனக்குவேண்டும் ஸங்கீதம் இதுவே பாடும்

5. வேதியன் உரைப்பதெல்லாம்
வேண்டும் வேதம் கீதம் காணும்
சேதியும் சொல்லச் சேரும் சேயர்சாஸ்திரத்துச் சாரும்
பேதியும் முடியுமானல் பேதித்துப் பாரும் பார்ப்போம்.
வேதியன் வாய் வார்த்தை வேணும் வேதம் கீதம் சாஸ்த்ரம்

6. வேதகீத சாஸ்த்ரங்கள் வேண்டும் வேலைகள் ஆக்க
பேத பீதிகள் இன்றே பேய்போலப் பறக்கஓட்ட
வேதம் ஓதான் ஆனாலும் வேத கீத சாஸ்த்ரம் இதனை
பேதம் பாராட்டாமல்
பார்த்தன் என் புகழைப் போற்றப் பாரும்

7. பாருங்கள் பார்த்தன் என் புகழைப்
பாடிப் பஜிப்பார் பலரும்
வாருங்கள் வைகுந்தம் வெங்கடேசர் என் விண்ணகரம்
காருங்கள் காண எண்ணி
காகுத்ஸன் என் கண்காக்ஷியைப் பாரில்
பாருங்கள் பலபக்தர் பார்த்து என்னைபஜிப்பதையும்

8. பஜிப்பார்கள் பலவிடத்தும் பற்பல பகல் பாரும்
குதிப்பார்கள் கூடவே கோவிந்தன் என்கொள்கை கொண்டே
துதிப்பார்கள் தேவாம்ருத தேவர் வாழ்த்தே இது என்று
மதிப்பார்கள் மறையோரை மாநிலம் முற்றும் முன்போல்

9. மாநில மாக்ஷிமை மாத்மியம் மாறல் ஆகும்
காணில் கண்டறிவீர்கள் கலியுகக் கடைசியில்
தானியல் தந்தருள் தாரணி தாஸர் கூட்டம்
மாநிலம் மகிழுமாறு மாந்தர் மக்கள் மாற

10. மாறு திருக்கு மாறு மாதவன் என் மாத்மியங்கள்
பாரா போட்டது போலும் பார்த்துப் பரிந்துக் கார்க்கும்
சீராகச் சொன்னதெல்லாம் என் செல்வன் சொற்போல்
[செய்வார்க்கு
நீராக நீத்துப்போகும் நின்ன நிந்தைகள் கூட

11. நிந்தைகள் நீராகி நேரும் விந்தையைக் காட்டும்
சிந்தையினி யேது சீரிற் செழிக்கும் சேயராக்கில்
விந்தை இங்காகாதோ வியனுலகாம் இதுவும் என்றால்
நிந்தை யொன்றும் நினைக்காமலே
நிலையாய் இங்கு நின்று கேளும்

12. கேளும் கேள்விகள் கண்டு கண்ணன் என் கழல்கள் காட்ட
வேலும் வேங்கடமும் வேறே வேதியன் வாய்ச் சொல்
[போலும்
நேரும் நிந்தைகள் நீக்க நேராகி நின்றும் இங்கு
கேளும் கேள்விகள் என்றும்
கேட்ட கேழ்விக்குப் பதில் சொல்வேன்
ஸ்ரீ நீளா பூமி தேவிகள் ஸமேதரான
சென்னைப்ரஸன்ன வெங்கடேசர்

கலியுக ப்ரபந்தம்.

ஸ்ரீ நீளா பூமி தேவிகள் ஸமேதராய சென்னை ஸாவுகார்
பேட்டை ஜெனரல் முத்யா முதலி தெருவு என்
னும் ஸன்னதி வீதியில் அகிலாண்ட கோடி
ப்ரம்மாண்ட நாயகராயும் ஆபத் பந்து
வாயும் அநாத ரக்ஷகராயும் திவ்யமங்
கள அர்ச்சாவதாரியாயும் எழுந்த
ருளியிருக்கும்படியான சென்னை
ப்ரஸன்ன வெங்கடேசர் என்
னும் கலியுக ஸ்வயம்பூ
நாதரின் ப்ரபாவம்.

சென்னை ப்ரஸன்ன வெங்கடேசஸ்வாமியின் வீதிகளின் விமர்சைகளும் அவற்றின் ப்ரபவாங்களும்.

பல்லவி

வீதி வகைகளின் விமரிசைகள் விவரமாய்
நீதி நடைகளின் நிகரில்லா நிலைபோலும்

அநுபல்லவி

வேதியன் வாய்வழி வெங்கடேசர் வாழ்த்தை
வேதம் போலும் வேதகீதம் போலும் வேண்டும்

சரணங்கள்

1. வேதம் உரைப்பதென்ன
வேதகீதம் உணர் விப்ப தென்ன
வேதம் கீதம் உணர்த்துமாப் போல்
வேண்டும் சாஸ்த்ரம் உரைப்பதென்ன
பேதம் வேறுண்டோ பாரும்
பேதித்துக் காட்டும் பார்ப்போம்
வேதம்—கீதம் சாஸ்திரங்கள்
வேண்டி சொன்னாரே சொன்னர்
வீதி வகைகளின் விமரிசைகள் விவரமாய்
நீதி நடைகளின் நிகரில்லா நிலை என்பாம்

2. வேதம் கரையிலது வேண்டும் முதலுளது
வேதியர் வாய்வழி ஓதும் ஸம்ஸக்ருதம்அது
கீதம் நிறையுள்ளது கீண்டும் மொழியுள்ளது
கிட்ட நெறுங்கிடில் கேழ்க்கும் பலநாட்கள்
வேதம் கீதம் போல்தான் ஆம்
வேண்டிடும் சாஸ்த்ரங்களும்
வேத கீத சாஸ்த்ர சாரும்
வெங்கடேசர் சொல் வார்த்தை

பல்லவி

வீதி வகைகளின் விமரிசைகள் விவரமாய்
நீதி நடைகளின் நிகரில்லா நிலைபோலாம்

அநுபல்லவி

3. வேதியன் வாய்வழி வெங்கிடேசர் வார்த்தை
வேதம் போலும் வேதகீதம் போலும் வேண்டும்

வீதிகளைப்பற்றி சுருக்கமாய் சொன்னது.

வீதிகளுக்குள்ள விமரிசைகளை விப்ரன் வாய்வழி விளம்பவேண்
[டிடில்
நீதிகளுக்குள்ள நிலைநெடுவினில்நல்ல வழிநாட்ட நேரும் எனவே
ஆதிபரஞ் சோதியாகும் ஆனந்தக் கடவுள் இன்று
ஓதுவாய் இதைஎன்று சொல்லியே ஓதுவேதம் இதுவேஎன்றார்
போருமோ இது என்று கேளு நீ போராவிட்டால் சொல்வேன்
[என்றார்
நீதி இன்னும் இங்குவேண்டிடில் நீத்யமாய்இங்குவரச்சொல்என்
தீதில்லாத நீதிகளைத்தான் த்வயமாகவே சொல்லுவாரும் [றார்
நீதிநல்ல நிலையில் நாட்டி நல்லவழியே காட்டுவாராம்
மீதி நீதி காட்டுவிப்பாராம் மிஞ்சிபோன காரணத்தால்
மீதிபேரை ஆட்டுவிப்பாராம் மீறிகெட்ட வழிநடந்தால்
நீதி நெறிகள் தப்பாதார்க்கு நல்லவழியைக் காட்டுவிப்பாராம்
வீதி வீதியின் விமரிசைகளை விப்ரன்வாய் வழி ஓதுவித்தே
தீதில்லாத பல திவ்யஸ்தலங்களின் திக்கு திசைகளை அறிவிப்
[பாராம்

ஜனரல் முத்யா முதலி என்னும் ஸன்னதி வீதி

பல்லவி

ஜகரம் முதல் ஆகும் ஜனரல் முத்யா முதலி வீதி
ஸகரம் முதல் ஆகும் ஸந்நதி வீதி இதுவே

அநுபல்லவி

அகரம் முதல் ஆகும் அத்தன் அவர் அருளை
பகரம் முதல் ஆகும் பலர்க்கும் ப்ரஸா திக்கும்

சரணங்கள்

1. அகர அக்ஷர அடுக்கு அமரும் அச்சுதர் வீதி
பகரப் படும் பக்தர் பலரும் பஜிக்கும் வீதி
அமர அனைவ ரையும் அழைக்கும் அமர வீதி
பகரப் படாதென்று பொய்யைப் போக்கும் வீதி
ஜகரம் முதல் ஆகும் ஜனரல முத்யா முதலி வீதி

2. அச் யுதர் அனைவரையும் அழைத்து அணைக்கும் வீதி
உச் யுதம் உணரல் ஆகும் உத்தமர்க்கு உழைப்பாரேல்
கச் சிதம் கண்டுள்ள கண்ணன் கழல்கள் காண
உச் யுத உத்த மர்கள் உலாவிவந்து உகக்கும் வீதி
ஜகரம் முதல ஆகும் ஜனரல் முத்யா முதலி வீதி

3. அரி அரர் அனைவரையும்
அரியச் செய்யவே வேண்டி
அரியே அநேக நாளும்
அரரும் சில நாட்களும்
பரியைப் போட்டி மூக்கு மாப்போல்
பல பக்தர்களை அழைத்து
அரி அவர் தங்களையே
அரிய பஜியுங்கள் என்னும் வீதி
இவ்வீதியின் விமரிசை வெங்கடேச சொற்களால்
இவ் வேதியன் வாய்வழி வேணுமாகில் விவரிப்பேன்
அந் நீதியின் நிரூபணம் நீங்கள் அங்கு கேட்டாற்போல்
இவ்வேதியன் என்வாய்வழி வேண்டி கேட்டால் சொல்
[லல் ஆகும்

4. அடுத்து அடுத்து அனைவர்களுமாய்
அப்பனை அர்ச்சிக்கும் வீதி
தொடுத்து தொடுத்துத் தோளில்சாத்த
தொண்டர் மாலைகள் தொடுக்கும் வீதி
அடுக்கு அடுக்கு மேல் அமரவைத்து
அப்பனை அமர்த்தும் வீதி
தொடுக்கு தொடுக்கென தொண்டர் பாபத்தை
தொலைக்கத் துறத்திடும் தொண்டர் வீதி

வீதியின் விமரிசை வேங்கடேசர் சொல்போலும்
வேதியன் வாய்வழி வேணும் என்றால் சொல்வேன்

5. அப்ரமேயர் அமர்ந்திருந்து
அனைவரையும் அழைக்கும் வீதி
ஸுப்ரஸன்னர் ஸுகமாய் அமர்ந்து
ஸ்வதந்த்ரங்களை ஸுகிக்கும் வீதி
அப்ரமேயரின் அனுக்ரஹத்தினால்
அனைவருக்கும் அருள் அளித்து
ஸுப்ரஸன்னர் புஜித்த சேஷத்தை
ஸ்வீகரிக்கவர அழைக்கும் வீதி
வீதியின் விமரிசைகள் விப்ரன் வாய்வழி வார்த்தை
வேதியர்போல் வந்த வேங்கடேசர் சொல்வே

6. அனைவர்களுமாய் அடுத்து அடுத்து
அவர் அவர்களின் அபிப்ராயத்தை
துணை வரும்படி துதித்துத் துதித்து
துயர்கள் இன்றியே துக்கம் தொலைத்து
அடையவரும்படி அன்பர் அவர்களை
அழைத்து அணைக்க அமர்ந்த வீதி
துணைவரும்படி துளபமாலையை
தோளில் தாங்கிடும் தொண்டர் வீதி
வீதியின் விமரிசை விப்ரன்வாய வழிவார்த்தை
வேதியர்போல் வந்த வேங்கடே சர் சொல்லே

7. அரியின் அருஞ்செயல்கள்
அனைவற்றையும் அரிவிக்க
அகர அக்ஷரத்தாலே
அரிவிப்பேன் அனேகம் இன்னும்
அதுபோலும் அடுத்த எழுத்துகள்
அனைவற்றாலும் அரிவித்தல் ஆகும்
அரிய பெரிய அந்த கடவுள்
அனைவருக்கும் அன்னை தந்தையே
வீதியின் விமரியை விப்ரன்வாய்வழிவார்த்தை
நீதியின் நியமனம் நிஜமாக நிறுத்துங்காண்

8. அங்கு அந்த ஆகாயத்தில்
அந்தரத்தில் அமர்ந்து உள்ள
அதோகாணும் அந்நக்ஷத்ரங்கள்
அரியல் ஆகுமோ அனைவற்றையும்
அதனைப்போலே அப்பன் அருளை
அரியல் ஆகுமோ அடுக்கி அடுக்கியும்
அவ்வவற்றின் அதிசயங்கள்
அனேகமெனவே அரியல் ஆகும்

9. விதி இதனுட விமரிசைகளை
விப்ரனே விவரிப்பேனானல்
நீதி அதனுட நிஜங்கள் எல்லாம்
நிச்சயமாய் நிலையில் நிறுத்தும்
நீதியால் நிந்தை நில்லாதோடிப் போம்
நிஷ்களங்கங்கள் நிலைக்கல் ஆகும்
விதி இதனுட விமரிசைக்கள்

10. அடுத்து அடுத்து அகர எழுத்தே
அடுக்கு அம்புகள் அவைகள் போலும்
அரிஅரியாய் அடுக்கிகட்டும் தாள்
அறுத்த அறுப்பின் அறுவடையைப்போல்
அறிஅறியென அறுக்க அரிவீர்
அப்பன் அருளினை அடையாதாரை
அடுத்தபடியே அவையும் காண்பீர்
விதி—கேளும் அப்பன் அருளால் அடையும் பலன்களை

11. அன்னதான அதிசயங்கள்
அமரத்தக்க அரிய விதியாம்
அனேககோடி அளவில்லாதானம்
அடுக்கு அடுக்காய் ஆகக்காண்பீர்
அரிய அந்த அடுக்கு நக்ஷத்ரம்
அளவாய் எண்ணியே அரியல் ஆயினும்
அளவில்லாதிங்கும் அடையும் பலன்களை
அவரவர்களே அளவிடார்களே
விதி இதனுட விமரிசை வேண்டி கேளும்

12. அலையுங்கடலின் அலைகளுங்கூட
அணுகி வந்து அடுத்ததே போல்
அலைந்தபடியே அலைச்சல் அடைந்தாரும்
அணுகி அவரை அடுத்து ஸேவித்து
அப்பன் அருளால் அதனை-அழித்து
அரிய அரும்பலன் அடைதல் ஆகும்
அதனை அறியாது அழிந்தார் அன்றோ
அறிவில்லாத அந்த அசடர்கள்
வீதி இதனுட—கேளும்

13. அருகம் புல்லை எண்ணல் ஆகுமோ
அப்பன் அருள்களை எண்ணல் ஆகுமோ
அணுக அப்பன் அருள் அடையும்
அந்த வீதியின் அதிசயங்கள்
அருகம் பில்லை அளவிடாதுபோல்
அவைகளும் அளவிடல் ஆகாது காண்
அணுக அடைந்திடும் அனைய அன்பர்கள்
அதனைப்போலும் அடைவர் என்பேன்
வீதி இதனுட விமரிசைகள்
விப்ரன் என் தந்தை வேங்கடேசர் சொல்

14. அன்னதானம் அதனைப்போலும்
அனேக அகில அரிய தானங்கள்
தள்ள தென்றென எண்ணுதார்கள்
தந்தை பேரால்தாமே செய்வார்
தள்ள தென்று எண்ணுவாறும்
தக்கபடியே தாமும் செய்வார்
அன்னதானத்தின் அரிய பலன்கள் போல்
அடைதல் ஆக்கும் அவைகளுங்கூட
வீதி இதனுட விமரிசைகள்
விப்ரன் என் தந்தை வெங்கடேசர்சொல்

15. அன்னதானங்கள் அவற்றைப்போலும்
அடைவர் கன்னிகாதான மதனால்

அப்பன் அடிகளோ அவற்றின் அருள்களோ
அவரவர்கள் அடுக்குமாறு
அத்தன் அருளால் அதனை அறிவித்தேன்
அதுதான் அவருடஅருளாம் அடியேனால்
அத்தன் அவரே அரிவித்தார் இதை
அன்பர் அனைவர்க்கும் அளிக்கு மாறு
வீதி இதனுட விமரிசைகளை—சொல்

16. அடுக்கு அடுக்காக அமரர் அவர்களை
அரிய அருமையாம் அடுக்கும் யாகங்கள்
படுக்கு படுக்கென பாபம் போக்கியே
பண்ண புண்ணியங்கள் பாரில் பார்க்கவே
அடுக்கு அம்பு போல் அன்று அடைந்த
அந்த அமரர்கள் அவைகளைக்கொண்டு
படுக்கு படுக்கென பலன்கள் பலவற்றை
பக்தர்களைப் போற்றி புகழ்ந்து ப்ரஸாதிப்பார்
வீதி இதனுட விமரிசைகள் சொல்

17. அரக்கர் அசுரர் அவர்கள் அணுகார்
அரிவீர் அதனை அப்போ அங்கு
மரங்க மஹிபர் மஹத் மியத்தால்
மாந்தர் மஹாயாகம் ஆக்கு அப்போ
பிறக்கப் போகிறார் பின்னும் பார்ப்பீர்
ப்ரியமாயுள்ள பக்தர் வயிற்றில்
அரக்கர் அசுரரை அடியோடழித்தாற்போல்
அகில ஜனங்களின் அஞ்ஞானம் அறுக்க
வீதி இதனுட விமரிடைகளோ
விப்ரன் வாய்வழி வெங்கடேசர்சொல்

18. அன்று அன்றோ அனைவர் அரிவார்
அப்பன் அருளோடு அன்பு அவைகளை
நன்று என்றும் நல்லதென்றும்
நாடு நன்கு நினைத்தல் நேரும்

இன்று இங்கு இப்போ இசைப்பது
இன்னல் நீக்கியே இனியதாக்கும்
அன்று அது முதல் அப்பன் அருளை
அடைவீர் அவரவர் அரிய அருள்களை
வீதி விமரிசை —சொல்

19. அன்று என்றது அடுத்தநாளோ
அதையும் அடுத்து அடுத்தநாளோ
என்று என்னை எவர் கேட்டாலும்
எண்ண எண்ணங்கள் எல்லாம் சொன்னபின்
அன்று முதல் தான் அடியேன் சொல்வேன்
அப்பன் அன்னைமார் ஆக்ஞை அதனை
இன்று என்னை இடைஞல் இன்றி
இதர வார்த்தைகள் இசைக்கச்செய்யும்
வீதி விமரிசைகள்—சொல்

20. அரிய அரும்புகளை அடுக்கடுக்காய் அடுக்கி
அணிய அருமாலைகள் அழகழகாய் அளித்து
அரிய அன்னைமார்கட்கும் அத்தன் அவருக்கும்
அதிக அன்பதனாலே அர்ச்சிக்க அமரும் வீதி
வீதியின் விமரிசைகள் விப்ரன் வாய்வழி வார்த்தை
வேதியர் வேஷம் பூண்ட வெங்கடேசர்வாழ்த்தே

21. அரிய அரும்புகள் அதிக அழகாக
அன்பர் அவர்களுக்கு அளிக்கும் அதனைப்போல்
பெரிய பெரும்பொருள் பெற்று இங்குபின்னால்
பேரன் பேத்திமார் பார்த்து போற்றப்புகழ்ந்திங்கு
அரிய அருமையாம் அன்பை அவர்களுக்கும் ஆக்கி
அத்தன் அருள்களை அவர்களுக்கும் அளித்து
பெருவீர் பெரும்புகழ் பேருடன் எனறிங்கு
பற்றும் பாசத்தால் போதிப்பார் பார்ப்பீர்
வீதி வகையின் விமரிசைகள் விவரமாய்
விப்ரன் வாய்வழி வேண்டில் வேணவேலைகள் செய்யும்
நீதி நிலைகளின் நிர்ணயம் போலும் நின்று
நிஜங்கள் நிலைநிறுத்தி நீர் மெய்யை நாட்டும்

22. அரும்பு அதனைப்போல் அத்தன் அருளை
அடியேனுக்காய் அவர் அழைத்து அளித்தார்
கரும்பு கடையது கண்டு கூப்பிட்டு
களிப்பாய் கருப்பஞ்சாறென்னு மாப்போலே
அழுக்காறு அழித்திடு அகத்தில் முன்னால்
அட்பன் அருளினை அடைவாய் பின்னால்
கரும்பு கடைபோல் கண்டு களிப்பாய்
கண்ணன் கழல்களைக் கண்ணால் என்னார்.
வீதிவிமரிசை விப்ரன் வாய்வழி
வேண்டி கேழ்ட்பின் வேணவையாகுப்
ஆதிமூலம்ஆம் அப்பன் அருளே
அன்று அங்குபோல் என்றும் எங்கும்ஆம்

23. அழகாம் அணிகலம் அணிந்த அவர்கள்
அழகே ஆவார் அதனைப் போலும்
அருளாம் அவர்அருள் அதனை அடைந்த
அடியேன் அவரேபோல் அளிக்கல் ஆவேன்
அருளால் அவர் இங்கு ஆக்கும் அருஞ்செயல்
அன்போடு அவரே அறிவிக்கச் சொன்னவை
அதுகாண் அடியேன் அடையும் அருள்என
அனைவரும் நன்கு அறிதல் ஆகுமே
வீதி இதன் விந்தை விப்ரன் விசதமாக்க
மீதி இதன் நிந்தை—மின்னல்போல் மாறிப்போம்

24. அத்தன் அருள்களை அடியேன் அடைந்தாற்போல்
அனைவரும் ஆகவே அடைய அணுகுவீரேன்
எத்தன்மையாகவும் எந்தெந்த நாட்களும்
எந்தையை எப்படி எய்தலாம் என்றிங்கு
அத்தன் அவரது அனுக்ரஹம் அதனாலே
அவர் அவர்களாலே ஆனமட்டும்ஆக
தத்தம் தருமங்கள் தப்பாமல் தாம் வந்தால்
தக்க தோத்திரங்களைத்தான் தந்தருள்வேன்
வீதியின் விமரிசை விப்ரன் வாய்வழி வார்த்தை
நீதியில் நிலைநின்ற நிருபண நிகராகும்

25. அரிய அரும் விஷயங்கள் அனைவரும் அரிவார்கள்
பெரியபுகழ் எனவே போற்றிப்பணிந்திடுவார்கள்
தெரிய தத்துவம் எல்லாம்
தெய்வ வாக்கினால் என்று
அரிய இங்கினி அமருவார்கள் அனைவருமாய்
என்னும் வீதி
வீதி இதன் மாறிப்போம்

26. அனந்த கோடி அகில அன்பரை
அழைத்து அணைக்க அமர்ந்த வீதி
ஸஹஸ்ர கோடி ஸகல ஸந்ததி
ஸத்புத்ர பௌத்திரர் ஸுகிக்க வேண்டியே
அனந்த லோ டிருந்து அழைந்து
அனைவரையும் அனுக்ரஹித்து
ஸஹஸ்ர கோடி ஸகல பலன்களை
ஸர்வ விதங்களில் ஸாதிக்கும் வீதி
வீதி வகையின் விமரிசைகள் வெங்கடேசன்
சொல்லச் சொன்னார்
வேதியன் என் வாய்வழியே
வேண்டும் பக்தரே வேண்டி கேளும்

27. அனந்த அர்ச்சகர் அவரும் அன்பொடு
அவரை அடுத்த அகில அன்பரும்
மலர்ந்த மலர்களை மலரும் மகிழ்வொடு
மணத்தை மணக்கவே செய்யுமாப் போல்
அனந்த அன்பரை அனுக்ர ஹிக்கும்
அப்பன் அருளை அழைத்து அளித்து
மணந்த மக்களின் மணமகிழ்வினை
மயக்கமற்றிட மகிழ்ந்து வரும் வீதி
வீதி வகையின் விமரிசைகளை விப்ரன் வாய்வழி
வெங்கடேசர் சொல்லே
நீதி நெறியில் நிகர் இல்லாத நீரின் மெய்யராய்
நின்று கேளும்

28. அச்சுதர் அன்போடு அழைத்து
அமரர்களையும் அமரச்செய்து
உச்சுதர் உகக்குமாறு
உத்தமர் உறவாக்க வேண்டியே
இச்சுகர் இப்படிப்பட்ட
இன்னிசைகளை இணைத்து இழுக்கவே
அச்சுகர் அமர்த்தினரென
அனுக்ரஹங்கள் அளிக்கும் வீதி
வீதிவகைகளின் விமரிசைகள்
வீப்ரன் வாய்வழி வெங்கடேசர் சொல்
நீதி பதிவழி நிலை நிறுத்திய
நிர்ணய நிலை நிறைந்த வரின் சொல்

29. அகில அமரர்கள் அவரவர்களின்
அனைய அருளும் அவனுக் களித்து
ஸகல ஸத்துடன் ஸாதகங்களோடு
ஸப்தரிஷிகள் போல் ஸத்ஸபைகளில் வர
அகில அன்னைகள் அவரவர்களின்
அமுதை அருமையாய் அளித்து வளர்த்து
ஸகல ஸம்பத்தும் ஸத்தும் ஸந்தானமும்
ஸர்வஸ் வதந்தரமும் ஸாதிக்கும் வீதி
வீதி வகைகளின் விமரிசைகளோ
விப்ரன் வாய்வழி வெங்கடேசர் சொல்
நீதி நிலைகளின் நன்னெறிகளை
நிலைக்க நிறுத்தவே நின்றார் சொல்லே

30. அசடரில்லா அமரர் அனைவரும்
அவரவர்களின் அன்பை அர்ச்சிக்க
கசடரில்லா கல்வினரைப்போல்
கற்ற பாடல்கள் கறக்கச் செய்தனர்
அசடரினிமேல் அரிவார் அனைவரும்
அச்சுதரின் அரும் அன்பனிவனென
கசடரிங்கினி கற்க வருவார் என்று
கத்தி கற்பிக்க களிக்கும் வீதி

வீதி வகையின் விமரிசைகளை விப்ரன்
வாய்வழி வேண்டி கேட்டிடும்
நீதி வகையின் நிலை நிறுத்தவே
நீன்ற நீர்மெயயர் நிரூபம் எனக்காண்பீர்

31. அனந்த கருடர் அடுத்த சேனர்
அனைவரும் அடுத்து அமர்ந்திங்கு
தனந்தனை தகருரில்லாது உகக்க
தருந்த தொழிலை தந்திங்கு
மனந்தளராது மக்கள் மருக்கள்
மல்லிகை மலர் போலே மலரவும்
அனந்த கருட விஷ்வக்ஸேனர்
அனைவரும் அருளோடு அமர்ந்த வீதி
வீதி விமரிசை விப்ரன விளம்புதல்
விளக்கமாக விளங்கவில்லையோ
நீதி நிலை நெறிநின்று நிகழ்ந்தன
நிறுபண நிலைநின்று நிறுத்தினான்

32. அரக்கர்கள் அனைவரையும்
அன்று அங்கு அழிக்க அமர்ந்தவர்
அரக்கர் போலும் அசட்டை செய்திங்கு
அவரைச் சேர்ந்தாரை அழித்து வந்தாரை
பறக்கப் பாரினில் போக்கவே செய்து
பார்த்து அவர்களை தொழிலில்தள்ளவே
அரக்கர் அனைவரின் விரோதியாரும்
அப்பன் அவரே இங்கு அமர்ந்தார்
இந்த வீதியின் விமரிசை விப்ரன்வாய் வரவேண்டில்
அந்த நீதியின் நிரூபணம் நிலையாக நிற்கும் காண்

33. அரக்கர்களைப்போன்ற ஆகாத அசடர்கள்
தருக்கம் செய்யத்தக்க துஷ்டர்கள் ஆவார்கள்
கருக்கர் அவர்காணும் கண்ணன் சொல்போல் நடப்பார்
அரக்கர் தருக்கர் ஆகார் இதனை என்னும் வீதி அறிவீர்
வீதியின் விமரிசை விப்ரன் என்வாய் வழி — சொல்

ஓ அரக்கர் அனைவரையும் அழிக்க அன்றங்குவந்தார்
தருக்கர் போன்ற துஷ்டரைத் துலைக்க இன்றிங்கு
[சேர்ந்தார்
அரக்கர் அனைவரையும் அடித்தார் ப்ராணனைப்போரில் போக்கி
தருக்கர் போன்றுள்ளாரை துலைப்பார் தொழிலில் நீக்கி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்வாய்வழி
நீதி நிலைகளை நன்ருய் நிலைக்கச் சொல்லும்தெரிய

35. அச்சிட்டு விற்கச் சொல்லி அச்சுதர் சொல்வதெல்லாம்
உச்சிதமாய் எல்லாரும் உகந்துக் கொண்டாடவேண்டில்
கச்சிதமாகவேகற்கவேண்டும் என்றுகட்டளைகளித்துஇட்டு
அச்சிட்டு விற்கச் சொன்னர்
அவர் பேரினுலென்றும்—வீதி

36. அரிஅரர் அவர்களை அரியச்செய்யவே வேண்டி
அரியே அனேகநாளும் அரரும்சிலநாளும்
பரியைப் போட்டிழுத்தாற்போல பல பக்தரையும்கூப்பிட்டு
அரிஅரர் அவர்களை அடையும் பஜனைபண்ணும் வீதி
வீதிவிமரிசைகள் விபரன்வாய் வழியாக சொல்

37. அரிவிப்பார் அவர்சொற்கள் அனைவருக்கும் இங்கினி
தெரிவிப்பார் தெளிவாக தேர்ந்த தேவலோகம் ஆக்க
பதிவிப்பார் புஸ்தகங்கள் பார்க்க பல பக்தர்களை [வீதி
அரிவிப்பார் அனைவருக்கும் அவர்-பெருமையால் என்றும்
வீதி இதன்விமரிசைகள் விப்ரன் வாய்வழியாக சொல்

38. அடைய வருவார்காணும் அனைவரும் அவர் அருளை
தடையதொன்றும் இல்லாமல் தக்கத்துணை யெனவே
மடையரில்லை என்றும் மைந்தன் இவன் என்றும்
அடைய அரிவீர் என்றும் அனைவர்க்கும் அரிவிக்கும்வீதி

39. அடையவரும் அவர்க்கோ அணையவரும் அருளே
தடையதற்கும் தங்குமோ தக்க தோத்திரம் சொன்னல்
சடையதைப்போல் அன்றே
சலுப்பின்றி மேல்கிளப்பும் என்று

அடையவரும் அவர்களுக்கு அன்பாய் அரிவிக்குமூவி
வீதிவிமரிசைகள் விப்ரன் சொல்வா

40. அடைந்ததுபோலவே அனைவரையும் வர வழைத்து
தடையிதற்கில்லையென்று தக்க மொழிமொழித்து
எடை போட்டெடுத்ததைப்போல் எடுத்து எல்லா புக
[ழும்காட்டி
அடைவதே மேல் என்று அனைவர்க்கும் அரிவிக்கும்வீதி
வீதி விமரிசை சொல்

41. அடைந்தது அதுபோலும் அடைவது இது என
மடைந்த தடுக்குகள்போல் மக்கள் பலர்க்குதவ
கடைந்த மோரைப்போலும் கொண்டார்க்கும்தான் உதவ
அடைந்ததே மேல் என்று அரிவிக்கும் அரியவீதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்வாய்வழி சொல்

42. அணையதைப்போலையே அனைவர்க்கும் அருள்ஆக்கி
துணையதைப் போலையே துணையவர்போல் ஆகும்
கணையாழி அதைபோலும் கண்டுகளிக்கச்செய்து
அணையதைப்பாரும் என்று அனைவரையும் அழைக்குவீதி
வீதிவிமரிசைகள் விப்ரன் சொல்வாய்வழி வாழ்த்து

43. அணையில்லை என்பாரை அழிக்க அடுக்கும் பாணம்
துணையில்லை என்பாரை தண்டித்து காட்டல் ஆகும்
கணையில்லை என்பாரை கண்டித்தும் காட்டலாகும்
அணையில்லை என்னுதீர் அணையே இது என்னும்விதி
வீதிவிமரிசைகள் விப்ரன் சொல்விட வாழ்த்தாம்

44. அடைய வருவார்க்கோ அப்பன் அருள் அதாலே
தடை யுண்டோ இனிசொல்லும் தக்கப்புகழைப்பெற
நடையில் நடந்து வந்து நல்லதினங்களில் நாட
அடைய வருவீரென்று அனைவரையும் அழைக்கும் வீதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்வாய் வாழ்த்தே

45. அடையவரும் அவர்க்கோர் அணையவரும் அருளாலே
தடையே தான் வந்தாலும் தந்தைதோத்திரத்தாலப்போது
நடையதை பால்மாறுமல் நானுஜனங்கள் நித்யம்

அடையவரலாம் என்று அனைவரையும் அழைக்கும் வீதி
வீதி விமரிசைகள் விபரன் சொல்வாய்வழி

46. அடைந்தது போல் இன்னும் அடைவது என்றென்றும்
அனைவரும் ஆகவே அடிக்கடி எண்ணுமாறும்
துணையாக தோத்திரம் சொல்லி தன்னைத் துதிக்குமாறும்
அடைந்த அவரைச் செய்ய அழைக்கும் அரிய வீதி
வீதியின் விமரிசைகள் வாழ்த்தே

47. அடைந்தது அதுபோல் என்றும் அடைவதோர் அருமை [என்றும்
அடைந்தபின் அருள் அதாகும்
கடைந்தமோரில் வெண்ணையோ என்றும்
மடைந்த தடுக்கோ வென்றும் மக்கள் எல்லோருமாக
அடைந்தது போலையே [எண்ணி
அடையவாரு மென்றழைக்கும் அதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்வாய்வழி சொல்

48. அடைந்தது அதுபோலும் அன்பது இதுபோலும்
கடைந்தது காட்டிடும் கண்கண்ட வெண்ணெய் போலும்
மடைந்தது இதுவென மன்னன் மாயையைக்காட்டி
அடைந்தது அதன்பயன் அனைவர்க்கும் ஆக்கும் வீதி
வீதி விமரிசைகளை விப்ரன் சொல்வாய்வழி சொல்

49. அலை கடல் அதனை அடுத்து அன்று அன்பு அருளினரே
தலை உடல் தம்மை தொடுத்து தந்து நக்கதோர் தரும் [உறுப்புகள்
மலை அதன்மஹிமையை மைந்தர்க்குமகிழ்ந்து தூக்கியே [காட்டினற்போல்
அலை கடல் இதுவே என்றுஅகில ஜனங்களை அழைக்கும் வீதி
வீதி விமரிசைகள் விப்ரன் வாழ்த்தே

50. அலர்மேலு மங்கைத்தாயார் அமர்ந்த அரியவீதி [என்றும்
மலர் மேவும் மங்கை தாள்களை மகிழ்ந்துக் கொண்டாடி
தளர் மனம் உடையாரை தக்கதோர் தோத்திரத்தால் காட்டி
அவர் அவரி அடையாலம் என்று அனைவரையும் அழைக்கும் வீதி
வீதி விமரிசை வாழ்த்தே.

அலர்மேலு அம்மணியின் அரியபாதங்கள் அளிக்கும்வீதி
வீதி விமரிசைகள் வெங்கடேசர்சொல்

51. அதிபதி இவர்என்றே அனைவர்க்கும் அரிவித்து
மகிபதி மகிமைகளை மைந்தருக்குக் காட்டுமாறு
அதிபதி அவர்பாதம் அனுதினம் அர்ச்சித்து
அடிகதி என்பாருக்கு அருள் பாதம்காட்டும் வீதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்வாய்வழி கேளும்

52. அன்னியர் அனைவரும் அன்னியர் என்றெண்ணாது
தன்னியல் தோத்திரம் தன்னையே தினந்துதித்து
பண்ணியல பாபங்கள் பலவற்றைப் பறக்கடித்து
அன்னியர்போல இல்லாது அடைவிக்கும் மோக்ஷவீதி
வீதி விமரிசைகள் வெங்கடேசர் சொல்

53. அரிவுள்ள அமரர்கள் அனைவரும் அடைந்திங்கு
பரியுள்ள பாசுரம் பலவற்றைப் பதிப்பித்து
அரிவுள்ள மைந்தராய் அனைவரையும் ஆக்குவித்து
பரியுள்ள பொருள்போலும் பக்தியால் இழுக்கும் வீதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்வாழ்தது

54, அரிய திருவடிகள் அனைவர்க்கும் துணையாமே
தெரியவரும் இதுவே தெரிந்தப்பின் மறவீர்கள்
அரிய அரும்பொருளை அனைவரும் அடைவீர்கள் என்று
தெரிய சொல்லியே செய்யும் தேவலோக வீதிஇது
வீதிவிமரிசைகள் விப்ரன் சொல்வாயவழி வாழ்த்தே

55. அன்னியர் என்றதால் அன்னியதேசத்தார்
தன்னியல் தானுவாய்தக்க தோத்திரம்சொல்லி
சென்னியல செய்துள்ள சேர்க்கைச் சொல்லவும் கேட்டு
அன்னியர் வரலாம் என்று அழைக்கும் அகரவீதி—(வீதி)

56. அனைவர் என்றதனாலே அணுகக் கூடாது பறயர்
எளையவர் என்றதாலே எடுக்கப்படாது துலுக்கர்
அடைவார் என்றதனாலே அடையக் கூடாது கிறிஸ்தர்
அனைவர் அவரகளன்னி அடையலாம் என்னும் வீதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்வாய் வழி வாழ்த்து

57. அனைவர் என்றதன்பொருள் அறிவிக்க பின்னும் சொல்
[வோம்
அடைவர் அவர்கள்கூட அப்பன் அருள் அதனாலே
தடையின்றி தக்கதோர் தோத்திரங்களைச் சொன்னால்
அடைவர் அவர்பாதம் அடுத்து ஜன்மத்தில் என்னும்வீதி
விதி விமரிசைகள் விப்ரன் சொல்வாய் வழி வேதியர்

58. அரிய திருவருள் அப்பன் இவருதென்றே [சொல்
தெரிய எல்லாருக்கும் தெரிவிக்க வந்தபாடல்
அரிய பெருஞ்செயல் அனைவருக்கும் அடுத்து காட்டி
தெரியச் செய்யவே சொல்லும் தேவர் துதிக்கும் வீதி
வீதி விமரிசைகள் வெங்கடேசர் வாழ்த்தே

59. அரியப் படாது என்று அன்று மறைத்தங்கு
தெரியப் படாது என்று திரட்டி ஒளித்து வைத்தார்கள்
அரியப் பாடல்கள் அன்று அவைகளை இப்போ பாருமே
தெரியப் படும் இனி-மேல் தேவலோகம் இது ஆம் என்றே
வீதி விமரிசைகள் விபரன சொல்ல வாழ்த்தே

60. அரிந்தபின் அரிவார்கள் அவர்கள் கதியோ என்னவென்று
அரியச் சொல்லவே வேண்டில் அப்போதே யான் சொல்
[வேன்]
பெரிய புகழ்பெற என்னைப் பெற்ற என் தந்தை சொற்கள்
அறிந்த பின் அவர்களை
அடிப்பார் அனைவர் என்னும் வீதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல் வாழ்த்து

61. அடிப்பார் என்று சொன்னதாலே
அது கல்லடி கோல் அடியே இல்லை
அடியோ துலைத்தல் ஆகும்
அப்பன் ஆஞ்ஞையைப் போதும்
தடியடி ஒன்றும் வேண்டாம்
தள்ளும் கோயிலினின்றும்
அடி அதுவே போரும்
அவர்கள் ஆயுள் உள்ளவரைக்கும்
வீதி விமரிசைகள் விப்ரன் சொல் வாழ்த்தே

62. அடிப்பேன் என்று சொல்லி அடிக்கத் தடியை நோக்கி
படிப்பேன் புத்தகம் என்னு பதிந்த புஸ்தகம் பெற்று
கடிப்பேன் அதைப் போலும் ஒண்டு தண்டலே கீழ்வைத்து
அடிப்பேன் என்றதனுலே அடிக்கப்பட்டார் என்னும்வீதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்—கேளும்

63. அடி என்று அங்கு சொன்ன அந்தணர் அவர்களுக்கு
தடியடிப் படாமலே தப்பினுர்களென்னே அன்று
படிப்படியாகவே பலருந் தம்மைப் பார்க்கவே
அடியென்று சொன்னுதாலே
அழிவார் என்று சொல்லும் வீதி
வீதி விமரிசைகள் போலவந்துவெங்கடேசர்வேதியர்—சொல்

64. அடிக்கவந்தவன் போலும் அதட்டின தாஸநம்பி
அடிக்கப்படுவான் நன்ருய் அனைவராலும் இன்று—இங்கு
கடிக்கப் படுவான் பின்னுல் கடும்பசி அதனுலே
அடிக்கப் படுவாள் என்றும் அப்பனுலே என்னும் வீதி
வீதியை சொல்

65. அடித்தும் அதட்டியும் அப்பன் அருளை பிடுங்கிய
தடித்தும் கொடுத்தும் உள்ள தக்கை மொட்டை
பொன்னுள் என்பான்
படித்தும் பார்த்தும் பின்னர் பாராது போல் இருந்தான்காண்
அடித்தும் அவளை இன்றே அதடடிதுறத்தும் என்னும்வீதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்வாய்வெங்கடேசர் சொல்

66. அபியானம் சேர்ந்ததாலே அன்றைங்கு பிள்ளையானுன்
அனுமானம் நேர்ந்ததாலே அவன் இன்று இங்கு தள்ளப்படுவான்
அபிமானம் அதுகாணும் அந்த சேணியன் கொடுத்ததுணியே
அனுமானம்இதுகாணும் அச்செட்டிமோசம்என்னும்வீதி
வீதி விமரிசைகள் வெங்கடேசர்—சொல்

67. அன்று மூன்று கடிதங்கள் அடுத்தடுத்து மூன்று நாட்கள்
சென்று நானே கொடுத்து வந்தும் சேர்ந்த புகழைக்காணுதான்
இன்று இது முதலாய் இனிமை சொல் இங்கு கேழ்ப்பானே
அன்று அவன் சொன்ன சொற்கள் அவனை அழிக்கும் M!
[என்னும்வீதி
வீதி விமரிசைகள் வேதியர்—சொல்

68. அன்று கடிதங்கள் அப்பன்சொல்படி அவனுக்கு எழுதி அங்கு
சென்று கொடுத்திருந்தும் செய்தது என்ன கேளும் இங்கு
நின்று என்னை என்னவென்றான் நிஜமாகசொல்லச் சொல்
[லும் இப்போ
அன்று அவன் சொன்னதைப்போல ஆலயம் அதில் காட்
[டும் வீதி
வீதிவிமரிசைகள் விப்ரன் சொல்வாயவழி வேதியர் போல
வந்த வெங்கடேசர் சொல்லே

69. அங்கு அவனைக்கண்ட அந்த அகத்தில் அமர்ந்தார்கள்
தங்கும் தம்மிடம்தாமே தம்மதில்லை என்று அறிவார்
நங்கும் இகழைநீக்கும் நாரணனுர் மனையில் உள்ளார்
அங்கு இனிதங்காது அவனோடோ ஓடுவார் என்னும் (வீதி)

70. அன்று பசுக்கள்பாலை அவனதேபோல எண்ணி
சென்று விற்கவேசெய்த செட்டி முன்சேணியன்தான்
நின்று பதில்சொல்வானோ நிற்கச்சொல்லும் இன்று
வென்று இனி வருவானோ வ்யாஜ்யம் வேண்டி என்னும் வீதி
வீதிவிமரிசைகள் விப்ரன் சொல்லை வேண்டி கேழ்ப்பின்
நீதியின் நினைகள் எனவாம் நின்றிங்கே நிஜமாம் கேழ்ப்பீர்

71. அடுத்து அடுத்து கறந்து அங்கு பாலைவிற்கச்சொன்னான்
கெடுத்து கெடுத்து கன்றை கேழ்ப்பார் இல்லாததாலே.
எடுத்து எடுத்து தின்றான் எந்தை ஏழுமலையார் சொத்தை
அடுத்து அழிவான் என்று அனைவர்க்கும் காட்டும்வீதி
வீதிவிமரிசைகள் வெங்கடேசர் சொல்லே

72. அங்குஅந்த ஆச்பத்ரியில் அடுத்து நீங்கள்கேட்டுபார்த்தால்
தங்கும்புகழ் பாடல் பெருமை தக்கபடியே தெரியல்ஆகும்
இங்கும் இப்போதுணிந்து உள்ளார்
இதையே எடுத்து சொல்ல கேழ்ப்பீர்
அங்கு அதுவே அவனை அழிக்க
ஆகும் நெஞ்சே என்னும் வீதி
வீதி விமரிசைகள் விப்ரன் சொல்ல காண்பீர்

73. அடுத்த விப்ரர்களை அதட்டி மெரட்டிவெய்தான்
அடுக்குமோ அவனுக்கிங்கு அரிய இப்பெருங்கோயில்

விடுத்தபாணம் போலும விட்டார் பாசுரம் பாரும்
அடுக்காது அவருக்கென்று அவனைத்துலைக்கும் நீதி (வீதி)

74. அடுத்த ஜன்மம் அவனுக்கோ அரியச்சொல்லவே வேண்
கொடுத்த சாபம் இதுபோராதோ [டில்
கொடும்புகழுகாய் ஆவான் என்று
கடுத்து விழுந்தான் கள்வன் ஆகையால்
கண்டு புஸ்தகம் கேட்டபோது
தொடுத்து பாசுரம் பாணமாகி
துறத்தும் அவனை என்னும் வீதி
வீதி விமரிசைகள் வெங்கடேசர் சொல்

75. அன்று கொண்டு அவள் சொல் போலும்
சென்று பாலை செரித்து வந்தான்
கண்டு கேளும் கோபலன் தன்னை
அன்று செய்ததை அரிவீர் என்னும் வீதி

76. அங்கு அவன் சென்றபோது அவனுடனே
சென்ற கிழவன்
இங்கு இப்போவந்து சொல்லட்டும்
இல்லை என்று உங்கள் முன்னால்
தங்குவானு தரையின் மீது
தக்க உயிரைதன்னுள் வைத்து
எங்கு போவாள் என்று காண்பீர்
எனையவரும் என்னும் வீதி
வீதி விமரிசைகள் காண்பீர்

77. அடுத்து அடுத்து ஆவின்பாலை
அன்று கறந்து அங்கு விற்றார்க்கு
இன்னும் இங்கினி இனிமை இல்லை என்று
அடிற்று துறத்துதல் ஆக்கும் வீதி
வீதி விமரிசை காண்பீர்

78. அஞ்சுவாரை அடிப்பதுண்டோ அது எங்கேனும் நடந்த
[துண்டோ]
கெஞ்சுவாரை கெடுப்பதுண்டோ கெடுத்ததாகவும்
கேட்ட துண்டோ

அஞ்சவில்லை கெஞ்சவில்லை அவர்கள்
அதனால்கெட்டார் என்று பாரும்
அஞ்சு என்று அவரை அழைத்து
அரியபுத்திகள் சொல்லும் வீதி
வீதி விமரிசை காண்பீர்

79. அது கேட்டபின்னர் அஞ்சார் ஆகில்
மது குடித்தார் மாள்வதைப்போல்
அது அவர்களை அழிக்கல ஆகும்
மது வேண்டாம் என மறுக்கும் வீதி
வீதியின் விமரிசைகள விப்ரனசெயவாழி காட்டும்

80. அறுபத்து பாட்டுகளும்
அறுக்கும் அரிவாளைப்போலும்
அறுபட்டுஅவர்கள்வால்தனம் அடியோடு அழித்தல்ஆகும்
விடுபட்டுவிப்ரன்வாய்வழி விதிவழியே மதியைச்செலுத்தி
அறுபட்டு அலைவதற்காய்
அப்பன் ஆஞ்ஞையைக் காட்டும் வீதி
வீதியின் விமரிசைகள் விப்ரன் சொலவாய் காட்டும்

81. அகம் பாவம் அது அன்றே அவர்களை அழித்ததென்று
மகம்மாரும் மாசிமாஸம் மாந்தருக்குக் காட்டவந்ததால்
அகம் பாவம் கொள்ளாது அனைவரும் என்றும் அடங்கி
மகம்போலும் மஹிமையால் [இருந்தால்
மாயன் அருள்ஆம் என்னும் வீதி
வீதி விமரிசை காண்பீர்

82. அணியணியாய் அனைய தேவர்
மணியணியாய் மலைபோல வந்து
தனித்தனியாய் தம்பாடல்பாடி
அணிகலம்ஆக்க அமர்ந்த வீதி
வீதியின் விமரிசைகள் விப்ரன சொய்வாயவழி காண்பீர்

83. அணியணியாய் தேவர்வந்து அவரவர்கள் துதிகள்தந்து
தனித்தனியால் தோத்திரங்கள்தக்கவாறு துதித்துக்காட்டி
மணிமணியாம் அக்ஷரங்கள் முத்து கோததாற்போல
[எழுதச்சொல்லி

அணியணியாய் அனைவரையும் அவர்களைப்போல் ஆக்கும்
[வீதி

வீதி விமரிசைகள் விப்ரன் வாய்வழி கேழ்ப்பாருக்கு
நீதிபதியின் சொல்போலும் நிசமும் அவறறைக்காட்டும்

84. அணையணையாய் அனைவருமாய்
அமரவந்த அந்த தேவர்கள்
இணை இணையாய் இசைத்து இழுக்கும்
இனிமையாம் இப்பாடல் பாடி
துணை நினைப்பார் துக்கம் போக்கும்
தூய்மையான பாடல் என்னு
அணையை அடை என்று அனைவரையும்
அழைக்கத் தக்க அரிய வீதி
வீதியின் விமரிசைகளை விப்ரனவாய் வழிவேண்டி கேளும்

85. அடையவருவார்க்கு உடையகஷ்டத்தை
ஆற்று அணையைப் போலே நீக்கு வித்து
துணையை வேண்டி வந்து நிற்பாரின்
துணை யிதாகவும் இருந்து சென்று
அணையைப் போலும் அவரைக் கடத்தி
அரியினிடத்தில் சேர்த்து வைத்து
அடைய அவர் அருள் ஆக்கு விக்கும்
அரிய அருகுண முடைய வீதி (வீதி காட்டும்)

86. அடுக்கு அடுக்கென அமரர் அவர் வந்து
படுக்கு படுக்கென பாபம் போக்கியே
துடுக்கு துடுக்கென துக்கந் தீர்த்து பின்
அடுக்கு புண்யங்கள் ஆக்கிடும் வீதி
வீதி வகையின் விமரிசைகளை
விப்ரன்வாய் கேட்டு பாரும்

87. அந்த ரத்து அமரர் அனைவரும்
அவரவர் அருந்தொழிலைச் செய்ய
மந்த ரத்து மாங்கனி போல் இல்லாது
மதராஸ் மாநகர் மெய் ஆகவேண்டியே
தந்தரத்துடன் தம் தகுந்த மந்த்ரங்கள்
தக்கபடியே தாமேசெய்து

அந்தரத்தில் அமைந்தபடியே
ஆக்குகின்றார் அமரர் உலகம் (வீதி)

88. அந்த லோகம்போல் இந்தலோகமும்
அடுத்தப்படியே ஆகவேண்டி
சொந்தமாகவே என்னைக்கொண்டார்கள்
சொல்லச்சொன்னார்கள் இதையும் இப்போது
எந்தபிள்ளை ஸொந்தம் என்னும்
எந்தை ஏழுமலை எம்பிரானுக்கு
அந்த லோகம்போல் இந்த லோகத்தில்
அரிவார் என்பதை அரிவிக்கும் வீதி (வீதி

89. அடுத்து விடுத்தபாணம் போலும்
அடுக்கிக்கொடுத்த அரியைப்போலும்
படுத்து பாய்ந்திடும் கங்கைபோலும்
பகுத்து பதங்களை பதித்துப்பார்த்து
எடுத்து எடுத்து எனக்குக் கொடுத்து
எழுது எண்ணு வ எழுதினேன்
அடுத்து உங்களை ஆதரிக்கும் என்று
அரிய அனைவரை அழைக்கும்வீதி
வீதிவிமரிசை வேதியன்வழி
நீதி நிலைகளை நிறுத்தினாற் போலும்

90. அருமையாகும் அப்பன் அருளினை
பொறுமை என்னும் பொருளால் பொருத்த
கருமையுள்ள களக்கம் அதனை
அடுமையாக்குமுன் அழிப்பாய் என்னும்வீதி
விதி விமரிசை விப்ரன் வாய்சொல
நீதி நிலைகளை நிறுத்தினர் சொல

91. அடுமை பெருமை அடைய வந்திடும்
அடுமைத்தொழிலை அதுபோலில்லாது
கடுமை காணாது கண்ட பழக்கம்
அடுமை என்னும் பதம் ஆக்கும் என்னும் வீதி
வீதி விமரிசை வெங்கிடேசர் சொல்
நீதி முற்றி நிலை நிறுத்தினர் சொல்வே

14478k
...னை-600 005.

92. அகரம் அதுபோல் பகரல் ஆகும்
அப்ரமேயரைப் புகழல் ஆகும்
மகரம் முதல் ஆகும் மஹாத் மியத்தை
மாந்தர் மகிழ்வுடன் மகிழ்ந்து கேட்டு
பகரம் முதல் ஆம் பதபதப்புடன்
பக்தர் பலரைப் பார்த்து பகன்று
அகரம் முதல் ஆம் அரியைப் போற்றிட
அனைவர்களையும் அழைக்கும் வீதி
வீதி விமரிசை விபரன் வாய்வழி
வேண்டி வியந்திடும் வேண்டு பக்தர்காய்
நீதி நிகலகளில் நிலை நிறுத்திடும்
நீதி பதிகளின் சொல்லைப்போனுக்க

93. அகரம் அதுவே அடுக்குக்கு முதல் ஆம்
நகரம் இதுவே தாட்டுக்கு முதல் ஆம்
பகரம் முதலாம் பக்தி அதனுல் ஆம்
அகரம் போலும் அருமை என்னும் வீதி
வீதி விமரிசை விப்ரன் சொல்வது
நீதி நிலைகளை நிறுத்தினர் சொல்லே

94. அகரம் நகரம் பகரம் அவை போல்
அக்ஷரங்களை அழைத்து அடுக்கி
ககரம் ணகரமெய் டகர உகரமாம்
கண்டு என்னும் கேழ்ப்பாருக்காம்
நகரம் இதுவும் நல்ல நாட்டுடன்
நன்கு சேர்க்கப் பட்ட் தென்றே
அகரம் உகரம் மகரம் போலும் அன்பருக்கு அறிவிக்கும் [வீதி

95. அகரம் உகரம் மகரம் என்னும்
அவைகள் அன்னே ப்ரணவம் ஆகும்
நகரம் இதுவும் நாட்டில் நல்ல நாரணர் நிலைநாட்ட லாகும்
அகாம் அடுக்கும் அச்சுதர் அருள்
அந்த ப்ரணவம் அறியச்செய்யும்
நகரம் இது முதல் நல்ல ப்ரணவம் போலுக்
நாரணர் புகழ் காட்டும் நன்கு என்னுப் வீதி

வீதியின் விமரிசைகள் விப்ரன் வாயவழியே கேட்டால்
நீதியின் நிலை நடுவாய் நல்லவழி காட்டக்கோறும்
வெங்கிடேசர் சொல்லை எல்லாம் வேதியன் யான்
வேண்டி சொல்லுவேன்
வேண்டி கேட்டால் வேணும்பலன் வேணுமென்றே
கொடுத்துக் காப்பார்
ஈண்டு இதை சொல்லச் சொன்னார் இப்பொழுதே
வெங்கடேசர்
ஆண்டுமிதை அனுபவித்தே ஆனந்தமாய் பார்த்து வாரும்
பார்த்து வருவதோடு கேழ்க்கவும் வாரும் என்றார்

96. அ. உ. ம அக்ஷரங்கள் அவை தாவுமே தக்கபொருள்
அ, உ மாவைப்போலும் ஆகுமோவேறு சொல்லும்
மேவுமே எவ்விடத்தும் மேலான பதவிகாட்ட
மேன்மையே என்றும்செய்ய மேல்நோக்கி நிற்கப் பார்ப்பீர்
ஏவுமே எவ்விடத்தும் எத்தொழில் செயயும்போதும்
எந்த மந்த்ரம் ஜபித்தபோதும் எவ்விடத்தில் ஆனபோதும்
அ-உ-ம. அக்ஷரங்கள் ஆக்கும் ப்ரணவமன்றோ
ஆதிமூலப் பொருளைக்காட்டும் ஆனந்த வீதி இது
வீதியின் விமரிசைகள் விப்ரனவா யவழியேகேட்டால்
நீதியின் நிலைநெடுவாய் நல்லவழிகாட்டும் கேளும்
ஆதிபரஞ்சோதியாகும் ஆனந்தங்கடவுள் இன்னது
ஆதிமுதல் நடந்துவந்த ஆனதோர் தேதிசொல்வாய்
ஓதுவீர் இதையும் என்று ஓதுவேதம் இதுவும் என்றே
போதுமோ சொல்லும் காணும் போராவிட்டால்
இன்னும் சொல்வேன்
நீதி இன்னும் வேறுவேண்டில் நிதயமாய் இங்குவாரும்
தீதில்லாத நீதிகளை திவ்யமாக சொல்லி பின்னும்
நீதிநெல்ல நிலையில் நாட்டி நல்லவழி காட்டுவிட்டார்
காட்டுவிப்பார் வெங்கடேசர் காரணங்கள்
தம்மைக்கொண்டே
ஆட்டுவிப்பார் உம்மையுந்தான்
ஆகும்வழி கெட்டதென்றுவ

கூட்டுவிப்பார் கூடாப்பாதம்
குழந்தை என்சொல் போல் நடந்தால்
காட்டுவிப்பார் அவர் பாதங்கள்
கதி இவையே நம்பும் என்று

97. அ என்னும் அகாரவாசி அரியையே என்றும் காட்டும்
உ என்னும் உயிர் எழுத்தோ
உத்தமியே ஆம் என் தாயைக்காட்டும்
ம என்னும் மறு எழுத்தோ
மக்கள் ஆகும் நம்மைக்காட்டும்
அ-உ-ம. என்றும் ஒன்றாய்
அரிவிக்கும் நல்ல ப்ரணவம் என்னும்
வீதி விமரிசைகள் விப்ரன்வாய் வழியே கேழ்ப்பீர்

98. அ-உ-ம. என்னும் அவைகள் அரியபெரும் அக்ஷரங்கள்
அவையன்றோ ஒன்றுசேர்ந்தால்
அரிய அரும் ஓர் எழுத்தாம்
அதுவே என்றும் ப்ரணவம் என்போம்
அரியபெரும் மந்த்ரமாக
அனைவருக்கும் இது உதவும்
அரிபக்தர் தாமன்னி அன்னியருக்கும்
வீதி விமரிசைகள் விப்ரனவாய் வழி சொல்லின்
நீதிபல நின்றுகாட்டும் நெல்லவழிகள் நாட்டுவிக்கும்

99. அ உ ம என்னும் எழுத்துக்களின்
அகில விகாரங்களால் ஆகும்
தாவும் புணர்ச்சியால் தான் தக்க மந்தரம் ப்ரணவம் ஆச்சு
பாவும் பதிப்பில் ஆச்சு பார்ந்தள் புகழ் காட்டல் ஆச்சு
அ உம என்பவை ஆகரு மாப்போல்
அரிய அக்ஷரம் உண்டோ என்றும்
வீதி விமரிசைகள் விபரன் வாய் வழியாகில்

100. அ, உ. ம என்னும் அவைகள்
அடையும் பலவிகா ரங்களால்
ஆகும் ஓம் என்று சொல்லும்
அரிய பெரும் ப்ரணவ மந்தரம்

பாரும் இதனைப்போலும் பாரில்உண்டோ வேறுசொல்லும்
பார்த்தன் புகழைப் பதிந்து போற்ற
பதுமை மலர் போல் ஆம் அக்ஷரம்
வீதியின் விமரிசைகள் வாழ்த்தே
101. அ. உ. ம என்றும் அக்ஷரங்கள்
அரி அரர் ப்ரம்மாவும் எனல் ஆம்
அரிவிப்பேன் காரணங்கள் அரியபெரும் அவர்களின்
செயலால்)
அகிலலோக சிருஷ்டி செய்யும்
அவர் அன்றோ ப்ரம்மா என்பார்
ஸகல ஜீவனை ஸம் ரக்ஷிக்கும்
ஸத்தன்றோ ஸதாவிஷ்ணு என்பார்
வீதியின் விமரிசைகள் விப்ரன் வாய் காட்டும்
102. அ என்னும் அக்ஷரந்தான் அரர் என்னும் சிவபெருமான்
உ என்னும் அக்ஷரந்தான்
உத்தமர் மஹாவிஷ்ணு என்பார்
மனன்அம் மறு எழுந்தோ
மகிப்பாய் ப்ரம்மாவையே காட்ட
அரிய பெரும் அவர்கள் செயல்
அரிய ப்ரணவம் காட்டும் என்னும்
வீதியின் விமரிசைகள் விப்ரன்வாய் வழிவேண்டில்
நீதியில் நெடுநிலைகள் நல்லவழிகாட்டும் கேளும்
103. அரியபெருங்கடவுள் ஒருவர்
ஆகும் முத்தொழில்கள் செய்ய
அரி அரர் ப்ரம்மா என்று
அனைவராலும் கொண்டாடப்படுகின்றார்
அவர்கள் மூவ்வருமாய் சேர்ந்தே
அரியபெரும் ஓர் கடவுள்
அதன் உண்மை இன்றறியும்
அப்பன் அவர் அருஞ்சொல்லால் என்றும்
வீதியின் விமரிசைகள் விப்ரனவாய் வழியேகோறு
104. அரியபெருந் தெய்வம் ஒன்றே
அரிவீர் என்றும் ஜயம் இன்றி

பெரியபெரும் புகழ்பெறவே
பெருமைகள் பலவும் சேர்த்து
